செய்தி வெளியீடு எண்: 402 நாள்: 05.07.2019

## செய்தி வெளியீடு

### “மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் குறித்து விழிப்புணர்வு முகாம்

### மற்றும்

### குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு நிதி தொடர்ச்சி மற்றும் செயல்பாட்டு நிர்வாகம்

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி நிறுவனம்) கிண்டி சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது.

தற்பொழுது தொழில் நடத்திக்கொண்டிருக்கும் தொழில்முனைவோர்களுக்காக, **“மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் குறித்து விழிப்புணர்வு முகாம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு நிதி தொடர்ச்சி மற்றும் செயல்பாட்டு நிர்வாகம்”** வரும் 10.07.2019 அன்று காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை– 600 032 என்ற விலாசத்தில் நடைபெற உள்ளதால், தொழில் செய்து வரும் தொழில் முனைவோர்கள், வருகை தந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பயிற்சி முகாமில் கலந்துகொள்வதால் தற்பொழுது செயல்பாட்டிலுள்ள நிதி ஓட்டம், விற்பனைக்கான சரக்கு மேலாண்மை, பெறத்தக்க மேலாண்மை, வங்கி கடன், வருவாய் விகிதம் மற்றும் அனைத்து மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் பற்றியும் அவைகளை தொழிலில் எவ்வாறு செயல்படுத்தலாம் என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

மேலும் இப்பயிற்சியில் சேர விரும்புவோர் தங்கள் பெயரை தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் நேரிலோ அல்லது இணைதளம் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள்.

| | |
|---|---|
| தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032. | 044-22252081 / 22252082<br>8668100336 / 8668102600<br>www.editn.in |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**